AL/2014/25-B/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | | |
|---|---|---|---|
| ඉතිහාසය II (I කොටස) <br> வரலாறு II (பகுதி I) <br> History II (Part I) | 25-B | T | II | පැය තුනයි <br> மூன்று மணித்தியாலம் <br> Three hours |

சுட்டெண் : ...............................

ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1989 வரை

**அறிவுறுத்தல்கள்:**

- ✳ இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்தில்** விடை எழுதுக.
- ✳ ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது.
  ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவு செய்து பின், அதனை **இப்பத்திரத்திலே அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
- ✳ **இவ்வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
- ✳ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி **I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் பகுதி **II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

● **1** முதல் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவு** செய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டினுள்** இடுக.

1. (1) கரிபியன் கடல் (2) ஏரல் கடல் (3) அஸ்சோவ் கடல் (4) கஸ்பியன் கடல் (5) மர்மாரா கடல் (......)

2. (1) கோஸ் (2) ஸமோஸ் (3) எல்பா (4) லெஸ்போஸ் (5) டெலோஸ் (......)

3. (1) ட்றகோ (2) சோலன் (3) கிளைஸ்தினிஸ் (4) பெரிக்கிளீஸ் (5) ஜஸ்ரினியன் (......)

4. (1) பற்றீசியர்கள் (2) பிளெபியர்கள் (3) அடிமைகள் (4) விசிகொத் குழுமத்தவர் (5) சுதந்திர மனிதர் (......)

5. (1) சலேர்ணோ (2) விர்றன் பேர்க் (3) பொலோஞ்ஞா (4) பதுவா (5) நேப்பல்ஸ் (......)

6. (1) ஜோன் வைக்கிளிஃப் (2) ஜோன் ஹஸ் (3) ஜோன் டெற்செல் (4) உல்ரிச் ஸ்விங்கிளி (5) ஜோன் கல்வின் (......)

7. (1) ஒலிவர் குறொம்வெல் (2) றொபேர்ட் வால்போல் (3) வில்லியம் பிற்ட் (4) வில்லியம் கிளாட்ஸ்ரன் (5) பென்ஜமின் டிஸ்ரைலி (......)

8. (1) ஜீன் வோடின் (2) தோமஸ் ஹொப்ஸ் (3) ஜோன் லொக் (4) ஜீன் ஜேக்ஸ் ரூஸோ (5) பிரான்ஸெஸ்கோ குயிசியார்டினி (......)

9. (1) லெபனான் (2) நைஜீரியா (3) இஸ்ரேல் (4) சிரியா (5) ஜோர்டன் (......)

10. (1) பொதுநலவாய அமைப்பு
(2) சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO)
(3) சர்வதேச நீதிமன்றம் (ICJ)
(4) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF)
(5) உலக சுகாதார நிறுவனம் (WHO) (......)

[பக். 2 ஐப் பார்க்க

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) ஹோமர் - ஒடிசி
(2) சொபொகிளிஸ் - ஈடிபஸ் ரெக்ஸ்
(3) சோக்கிரடீஸ் - இலியாட்
(4) பிளேட்டோ - குடியரசு (Republic)
(5) தியூசிடிடீஸ் - வரலாறு (History) (……)

**12.** (1) உரோமாபுரி - ரைபர்
(2) லண்டன் - தேம்ஸ்
(3) லிஸ்பன் - ராகுஸ்
(4) பாரிஸ் - சைன்
(5) பேர்லின் - டனியூப் (……)

**13.** (1) நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
(2) முப்பதாண்டுப் போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
(3) ஏழாண்டுப் போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
(4) கிறிமியப் போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
(5) முதலாம் உலகப் போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி (……)

**14.** (1) அனாபப்ரிஸ்ட் - ஜேர்மனி
(2) பிறெஸ்பிரீரியன் - ஸ்கொட்லாந்து
(3) பியூரிற்றன் - இங்கிலாந்து
(4) ஒல்லாந்து இறப்பிறமாதுத் திருச்சபை - கிரேக்கம்
(5) ஹியுகனோஸ் - பிரான்ஸ் (……)

**15.** (1) ஸ்பானிய ஆர்மெடா அழிவு - முதலாம் எலிசபெத்
(2) அமெரிக்கச் சுதந்திரப்போரின் வெற்றி - ஆபிரகாம் லிங்கன்
(3) ற்றபல்கா போரில் வெற்றி - நெல்சன்
(4) வோட்டலூ போரில் வெற்றி - வெலிங்டன்
(5) இத்தாலிய ஒன்றிணைப்பு - கவூர் (……)

- **16 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை **சரியான** தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள **ஐந்து** சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஹெரோடோற்றஸ் | A | முதலாவது உரோமச் சக்கரவர்த்தி |
| (ii) | ஹிப்போகிரட்டிஸ் | B | மானிடவாதத்தின் தந்தை |
| (iii) | ஒகஸ்டஸ் | C | கிறிஸ்தவத்தை அரச சமயமாக்கிய உரோமச் சக்கரவர்த்தி |
| (iv) | தியோடோஸியஸ் | D | வரலாற்றின் தந்தை |
| (v) | பெற்றாக் | E | மருத்துவத்தின் தந்தை |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | யூப்பிட்டர் | A | கடற் தேவதை |
| (ii) | மெனர்வா | B | போர்க் கடவுள் |
| (iii) | வீனஸ் | C | கைப்பணித்தொழில்களுக்கு ஆதரவு புரியும் அறிவுத் தேவதை |
| (iv) | நெப்ரியூன் | D | விண்வெளித் தேவன் |
| (v) | மார்ஸ் | E | காதற் தேவதை |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**18.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | தோமஸ் அக்குவைனாஸ் | A | டெக்கமரோன் |
| (ii) | டான்றே | B | யுரோப்பியா |
| (iii) | வொக்காஸியோ | C | பிரேய்ஸ் ஒப் பொலி (Praise of Folly) |
| (iv) | இராஸ்மஸ் | D | தெய்வீக இன்பியல் நாடகம் (Divine Comedy) |
| (v) | தோமஸ் மூர் | E | சும்மா தியோலோஜியா |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

[பக். 3 ஐப் பார்க்க

**19.** X — Y

(i) நோர்வே — A வார்ஷோ
(ii) ஃபின்லாந்து — B ஒஸ்லோ
(iii) போலாந்து — C சோஃபியா
(iv) பல்கேரியா — D புடாபெஸ்ட்
(v) ஹங்கேரி — E ஹெல்ஸிங்கி

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**20.** X — Y

(i) பிறகன்ஸா — A இங்கிலாந்து
(ii) றொமானோவ் — B பிரான்ஸ்
(iii) ஸ்ருவர்ட் — C இத்தாலி
(iv) சவோய் — D போர்த்துக்கல்
(v) ஓர்லியன்ஸ் — E ரஷ்யா

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**21.** X — Y

(i) 1453 — A வெஸ்ட்பேலியா சமாதான உடன்படிக்கை
(ii) 1555 — B பிராங்பேர்ட் பேரவை
(iii) 1648 — C வியன்னா மாநாடு
(iv) 1815 — D ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கை
(v) 1848 — E துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றியமை

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**22.** X — Y

(i) மாண்புமிகு புரட்சி — A 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'
(ii) அமெரிக்கப் புரட்சி — B 'சமாதானம், நிலம், உணவு'
(iii) பிரெஞ்சுப் புரட்சி — C 'புத்திமான்களின் புரட்சி'
(iv) 1848 ஆம் ஆண்டுப் புரட்சி — D 'அரசர் மீது பாராளுமன்றம் வெற்றி கண்டமை'
(v) ரஷ்யப் புரட்சி — E 'பிரதிநிதித்துவம் இன்றி வரியில்லை'

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**23.** X — Y

(i) பஸ்ற்றீல் கோட்டையின் தகர்ப்பு — A இரண்டாம் உலகப்போரில் அமெரிக்கா தலையிட்டமை
(ii) ஸ்பானிய புண் (Ulcer) — B. இரண்டாம் உலகப்போரின் முடிவு
(iii) போலாந்தின்மீது ஜேர்மனி படையெடுத்தமை — C நெப்போலியன் போனபாட்டின் வீழ்ச்சி
(iv) பேர்ள் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியமை — D பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டமை
(v) ஹிரோஷிமா, நாகஷாசி ஆகியவற்றில் அணுகுண்டு வீசியமை — E இரண்டாம் உலகப்போர் தொடங்கியமை

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**24.** X — Y

(i) றைன் ஓன்றியம் — A பிஸ்மார்க்
(ii) ஜேர்மன் ஒன்றியம் — B முதலாம் நெப்போலியன்
(iii) வடஜேர்மன் ஒன்றியம் — C முதலாம் கைசர் வில்லியம்
(iv) ஜேர்மன் பேராசு — D ஹிண்டன் பேர்க்
(v) வைமார் குடியரசு — E வியன்னா மாநாடு

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

**25.** X — Y

(i) ஜேர்மன் சமஷ்டிக்குடியரசின் முதலாவது சான்ஸலர் — A டிகோல்
(ii) ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் — B மார்ஷல் டிடோ
(iii) ஐந்தாவது பிரெஞ்சுக் குடியரசின் முதலாவது ஜனாதிபதி — C கொன்றாட் அடினோர்
(iv) யூகோஸ்லாவியக் குடியரசின் பிரபல்யமான ஒரு தலைவர் — D மிகைல் கொர்ப்பசோவ்
(v) சோவியத் சோசலிச குடியரசு ஒன்றியத்தின் இறுதியான தலைவர் (USSR) — E டக் அமர்ஸயோல்ட்

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

[பக். 4 ஐப் பார்க்க

3981

● **26 - 30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல சரியான** விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................. **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................. **3** எனவும்
**(A)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................. **4** எனவும்

**ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரியாயின் .................. **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(D)** யும் மட்டும் சரி | **ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரி |

**26. மேல்வருவனவற்றுள் கிரேக்க நகர அரசுகளில் நிலவிய ஆட்சிமுறைகள் யாவை ?**
(A) தியோக்கிரசி - இறையியலாட்சி
(B) ஒலிகார்கி - பிரதானிகள் கூட்டு ஆட்சி
(C) ஜனநாயகம்
(D) சாம்ராச்சியம் (......)

**27. மேலே குறிப்பிடப்பட்டோருள் உரோமச் சக்கரவர்த்திகள் யாவர் ?**
(A) பைதகோரஸ் (B) பேர்ஜில் (C) நீரோ (D) மார்க்கஸ் ஒரேலியஸ் (......)

**28. மேல்வரும் கூற்றுக்களில் கிறிஸ்தவம் தொடர்பாக எது / எவை சரியானது / சரியானவை ?**
(A) கிறிஸ்தவ சமயம் ஒரு கடவுள் வழிபாட்டு நெறியாகும்.
(B) யேசுக்கிறிஸ்து ஒரு கிரேக்கராவார்.
(C) கிறிஸ்தவ போதனைகளின்படி செயஸ் என்னும் தேவனே மீட்பவர் ஆவார்.
(D) கொன்ஸ்ரன்ற்ரைன் சக்கரவர்த்தி மிலான் பிரகடனம் மூலம் கிறிஸ்தவர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கினார். (......)

**29. மேல்வருவனவற்றுள் எவை மறுமலர்ச்சியின் அம்சங்கள் ஆகும் ?**
(A) கொதிக் கலைப்பாணியின் மறுமலர்ச்சி
(B) உரோம கட்டுமானமுறையின் நிராகரிப்பு
(C) மானிடவாதம்
(D) சமயச்சார்பற்ற நோக்கு (......)

**30. மேல்வருவோர்களில் இங்கிலாந்து மன்னர்கள் யாவர் ?**
(A) ஹென்றி VIII (B) லூயி XIV (C) சார்ள்ஸ் X (D) ஜோர்ஜ் III (......)

● **31 - 35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் **ஒன்று** உரிய தலைப்புடன் **பொருந்தாது. அதனைத்** தெரிவு செய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**31. கிறிஸ்தவ சமய சீர்திருத்தம்**
(1) ஜேர்மனியில் ஆரம்பமாகியது.
(2) கத்தோலிக்க திருச்சபையின் சீர்கேடுகளே அதற்கு ஏதுவான பிரதானமான காரணம்.
(3) மார்ட்டின் லூதர் என்பவரே கிறிஸ்தவ சமய சீர்திருத்தத்தின் தலைவர்.
(4) திருச்சபை பாவமன்னிப்புப் பத்திரங்களை விற்பனை செய்தமையை மார்டின் லூதர் கண்டித்தார்.
(5) இக்னேசியஸ் லொயலா மார்டின் லூதரின் ஆதரவாளர்களில் ஒருவர். (......)

**32. முப்பதாண்டுப் போரின் பிரதான கட்டங்கள்**
(1) பொஹீமியக் கிளர்ச்சி
(2) நோர்வேயின் தலையீடு
(3) டென்மார்க்கின் தலையீடு
(4) சுவீடன் தலையீடு
(5) பிரான்சின் தலையீடு (......)

**33. 1848 இல் புரட்சி ஏற்பட்ட நாடுகள்**
(1) ரஷ்யா (2) பிரான்ஸ் (3) ஜேர்மனி (4) ஆஸ்திரியா (5) இத்தாலி (......)

**34. இரண்டாம் உலகப்போரின் காரணங்கள்**
(1) வேர்ஸே உடன்படிக்கையிலுள்ள குறைபாடுகள்
(2) சர்வதேச சங்கம் தோல்வி கண்டமை
(3) ஹிட்லரினுடைய வெளிநாட்டுக் கொள்கை
(4) ஜப்பானுடைய ஆக்கிரமிப்புக் கொள்கை
(5) இத்தாலி, ஜேர்மனி ஆகியவற்றோடு அமெரிக்கா கூட்டுச் சேர்ந்தமை (......)

[பக். 5 ஐப் பார்க்க

**35.** பனிப்போர்

(1) அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் தலைமையிலுள்ள இருவேறு அணிநாடுகளுக்கிடையிலான கருத்தியல் ராஜதந்திர முரண்பாடு என பனிப்போரை வர்ணிக்கலாம்.

(2) ரஷ்யாவிலே 1917 இல் கொம்மியூனிசவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிய காலத்தில் அது ஆரம்பமாகியது.

(3) இரண்டாம் உலகப் போரின் பின்பு அது உலக அரசியலில் முன்னிலைப்படுத்தப்பட்டது.

(4) பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவரும் கொள்கையினை பிரெஷ்னேவ் பின்பற்றினார்.

(5) சோவியத்யூனியன் வீழ்ச்சியடைந்ததும் பனிப்போர் முடிவடைந்தது. (……)

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து, **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும், **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|
| **36.** லிபி, ரசிட்டஸ் என்போர் புராதன உரோமாபுரியில் வாழ்ந்த இரு பிரதானமான வரலாற்று ஆசிரியர்கள். | மேற்கு உரோமப்பேரரசு வீழ்ச்சியடைவதற்கு மிலேச்சர் படையெடுப்புகள் குறிப்பிடத்தக்களவிலே காரணமாயிருந்தன. | (……) |
| **37.** ட்ரென்ட் மாநாட்டின் மூலம் பிரான்சிலே சீர்திருத்தவாதக் கிறிஸ்தவர்களுக்கு மனச்சாட்சியின் அடிப்படையில் வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. | பிரான்சில் அரசர் மீதுள்ள கட்டுப்பாடுகள் அனைத்தையும் தகர்ப்பதும் ஐரோப்பாவிலே பிரான்சை முதன்மை வல்லரசாக்குவதும் ரிச்செலியூவுடைய இரு பிரதானமான குறிக்கோள்கள் ஆகும். | (……) |
| **38.** அதிகார வேறாக்கம் பற்றிய கோட்பாட்டை வொல்ரெயர் முன்வைத்தார். | ஏழாண்டுப்போர் ஐரோப்பாவின் இறுதிச் சமயப் போராகக் கொள்ளப்படுகின்றது. | (……) |
| **39.** "பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை" என்று நெப்போலியன் போனபாட்டை வர்ணித்துள்ளனர். | நெப்போலியன் போனபாட் பிரான்ஸின் அதிபராவதற்கு பிரெஞ்சுப் புரட்சி வழிவகுத்ததோடு புரட்சியினால் ஏற்பட்ட சாதனைகள் பலவற்றை அவர் முன்னெடுத்துச் சென்றார். | (……) |
| **40.** கிளஸ்னோஸ்ட் அல்லது வெளிப்படைத்தன்மை, பெரஸ்ரோய்கா அல்லது பொருளாதாரத்தின் மறுசீரமைப்பு என்னும் சோவியத் ஒன்றியத்தின் உள்நாட்டுக் கொள்கையினை மிகைல் கோர்ப்பசேவ் ஆரம்பித்தார். | கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் ஒரே தேசமாக இணைக்கப்பட்ட பின்பு வொரிஸ் ஜெல்சின் அதன் ஜனாதிபதி ஆனார். | (……) |

**

[பக். 6 ஐப் பார்க்க

3966

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-B T II

**ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1989 வரை**

**அறிவுறுத்தல்கள்:**

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** ஒன்று வழங்கப்படும்.)

**பகுதி II**

1. மேலே தரப்பட்ட இடங்கள் **எல்லாவற்றையும்** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்திலே **குறித்துப் பெயரிட்டு**, அவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.
   (i) கொன்ஸ்தாந்திநோபிள் (ii) றைன் நதி (iii) போல்டிக்கடல் (iv) சாடீனியா
   (v) பிரினீஸ் (vi) லண்டன் (vii) பெல்ஜியம் (viii) கிறிமியா
   *(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **ஒவ்வொரு** புள்ளி; சிறுகுறிப்பொன்றுக்கு **05** புள்ளிகள்)*

2. மேல்வரும் துறைகளிலே பண்டைய கிரேக்கர் ஈட்டிய சாதனைகளைப் பரிசீலனை செய்க.
   (i) சமயம் (ii) இலக்கியம் (iii) மெய்யியல் *(14 புள்ளிகள்)*

3. (i) மேற்கு ஐரோப்பாவிலே மானியமுறை ஏற்பட்டமைக்கான காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க. *(06 புள்ளிகள்)*
   (ii) ஒரு அரசியல், சமூக, பொருளாதாரமுறை என்ற வகையில் மானியமுறையின் பிரதான இயல்புகளைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

4. "புவியியற் கண்டுபிடிப்புகளின் காரணமாகப் பொருளாதாரத்தில் மட்டுமன்றி அரசியலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன."
   (i) ஐரோப்பாவிலே புவியியற் கண்டுபிடிப்புகளை ஆரம்பித்த **இரண்டு** ஐரோப்பிய தேசங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
   (ii) நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு புரிந்த மன்னர் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
   (iii) ஐரோப்பிய தேசங்கள் மேற்கொண்ட ஆரம்பகால நாடுகாண் பயணங்களைப் பற்றி ஒரு சுருக்கமான விளக்கவுரை எழுதுக. *(04 புள்ளிகள்)*
   (iv) மேலே தரப்பட்ட கூற்றினை புவியியற் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் தொடர்பாக ஆராய்க. *(06 புள்ளிகள்)*

5. "கைத்தொழிற் புரட்சி, 18 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இங்கிலாந்திலே நீண்டகாலம் நிலைபெறக்கூடிய பொருளாதார, தொழில்நுட்ப, சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது."
   (i) கைத்தொழிற் புரட்சி எதனைக் குறிக்கிறது என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. *(02 புள்ளிகள்)*
   (ii) கைத்தொழிற் புரட்சி ஐரோப்பாவில் ஏனைய நாடுகளைவிட முதன்முதலாக இங்கிலாந்தில் ஏற்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*
   (iii) கைத்தொழில் புரட்சியின் விளைவுகளின் அடிப்படையில் மேற்குறித்த குறிப்பினைப் பரிசீலனை செய்க. *(07 புள்ளிகள்)*

6. "மத்தியதர வர்க்கம் பிரெஞ்சுப் புரட்சியினைத் தொடக்கியது; அதுவே கூடுதலான பலன்களையும் பெற்றது."
   (i) பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும் தறுவாயில் கூட்டப்பெற்ற பிரதிநிதித்துவச் சபையின் பெயரை எழுதுக. *(01 புள்ளி)*
   (ii) பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்ட பொழுது பிரான்சில் ஆட்சிபுரிந்த அரசரதும் அரசியினதும் பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
   (iii) புரட்சிக்கு முற்பட்ட பிரான்சில் நிலவிய சமூகக் கட்டமைப்பினைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*
   (iv) பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகளைக் குறித்து முன்னே தரப்பட்ட குறிப்பினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

[பக். 7 ஐப் பார்க்க

**7.** "பிஸ்மார்க் 'போரும் இரும்பும்' என்னும் கொள்கை மூலமாக ஜேர்மனியை ஒன்றுபடுத்தினார்."
ஜேர்மனி ஒன்றிணைக்கப்பட்டமையிலுள்ள பிரதான கட்டங்கள் தொடர்பாக இக்கூற்றினை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

**8.** "ஐரோப்பா இரண்டு பகைமையுடைய அணிகளாகப் பிரிந்தமையே முதலாம் உலகப் போருக்கு ஏதுவான பிரதானமான காரணமாகும்."

(i) முதலாம் உலகப்போர் நடைபெற்றபொழுது ஜேர்மனியின் சக்கரவர்த்தியாக இருந்தவர் யார் ? *(01 புள்ளி)*

(ii) முதலாம் உலகப் போருக்கு ஏதுவாயிருந்த உடனடிக்காரணம் யாது ? *(01 புள்ளி)*

(iii) ஐரோப்பா இரண்டு பகைமை கொண்ட அணிகளாகப் பிளவுற்றிருந்தமை பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுக. *(04 புள்ளிகள்)*

(iv) முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கு ஏதுவான எல்லாக் காரணங்களினதும் அடிப்படையில் மேற்குறித்த கூற்றினைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**9.** பகுதி **(A)** **அல்லது** பகுதி **(B)** என்பதற்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இருவரின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

| | | |
|---|---|---|
| (i) மைக்கல் அஞ்சலோ | (ii) மார்ட்டின் லூதர் | (iii) கார்டினல் றிச்செலியூ |
| (iv) ஜோர்ஜ் வாஷிங்டன் | (v) மூன்றாம் நெப்போலியன் | (vi) V.I. லெனின் |

(ஒவ்வொன்றுக்கும் *07* புள்ளிகள்)

**(B)** (i) 1965 வரை ஐக்கியநாடுகள் சபை தொடர்பு கொண்டிருந்த பிரதானமான சர்வதேசத் தகராறுகளை விபரிக்குக. *(07 புள்ளிகள்)*

(ii) இந்தத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதில் ஐக்கியநாடுகள் சபை எந்தளவிற்கு வெற்றி கண்டது என்பதைப் பரிசீலனை செய்க. *(07 புள்ளிகள்)*

* * *

The National e-learning Portal for The General Education

3966

AL/2014/25-B-T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | |
|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 25-B | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. } 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. } ..............................




இங்கே வெட்டி அகற்றவும்